அனுப்புநர்

டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப.,
பேரூராட்சிகள் ஆணையர்
குறளகம்
சென்னை 600 108

பெறுநர்

அனைத்து மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள்

ந.க.எண். 1855/2008 இ 2 நாள். 1–2–2008

அய்யா,

பொருள்– பொது சுகாதாரம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிப் பகுதிகளை தூய்மையாக வைத்திருக்க அறிவுரை வழங்குதல் தொடர்பாக

பேரூராட்சிகள் நிர்வாகத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவது என்பது உச்சநீதி மன்ற உத்திரவின் அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துவது என்பது இன்றியமையாத ஒன்றாகும்.

2) பேரூராட்சிப் பகுதிகனை தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அதன் மூலமாக பேரூராட்சியின் பொது சுகாதாரம் பேணி காப்பதுடன் பொதுமக்களுக்கு நோய் பரவாமல் இருக்கவும் வழிவகை செய்யும்.

3) சென்னை மாநகராட்சிகள் கூட்டத்தில் பொது இடங்களான சாலைகள் , நடைபாதைகள், பாலங்கள், பூங்காக்கள் விளையாட்டு திடல்கள், நீர் ஆதாரங்கள் வர்த்தக மையங்கள் போன்ற பொது இடங்களில் குப்பை கொட்டுதல், சிறுநீர் கழித்தல், எச்சில் துப்புதல் உள்பட 24 வகையான தவறுகள் குற்றங்களாக கருதப்படும் எனவும் அதனை தடுக்கும் நோக்கத்தில் மாநகர மன்றத்தால் துணை விதிகள் வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி பொது இடத்தில் குப்பை கொட்டினால் ரூ. 100/– எச்சில் துப்பினால் ரூ. 50/– சிறுநீர் கழித்தால் ரூ. 50/– பொது இடத்தில் குளித்தால் ரூ. 50/– துணிகள் துவைத்து பாத்திரம் கழுவினால் ரூ. 50/– வாகனங்களை கழுவினால் ரூ. 100/– மருத்துவ கழிவுகளை குறிப்பிட்ட முறையில் பிரித்து வழங்காதவர்களுக்கு ரூ. 500/– குப்பைகளை பொது இடங்களில் எரிப்பவர்களுக்கு ரூ. 500/– வீட்டின் சுற்றுப் பகுதியை தூய்மையாக பராமரிக்காதவர்களுக்கு ரூ. 1000/–, அபராதம் விதிக்கப்படும் எனவும் இத்திட்டம் வரும் 1.4.2008 முதல் அமுலுக்கு வருகிறது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4) எனவே சென்னை மாநகராட்சியைப் போல் பேரூராட்சிகளையும் தூய்மையாக பராமரிக்க வேண்டியிருப்பதால், வீடுகள், தெருக்கள், தூய்மையாக பராமரிக்கவும், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தடுப்பு நடவடிக்கையாக அபராதம் விதிக்க பேரூராட்சி மன்றத்தல் தீர்மானம் இயற்றி, அதன் அடிப்படையில் செயல்படுத்துமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. அதனை பொது மக்களின் கவனத்திற்கு செய்திதாள் மற்றும் பிற ஊடகத்தின் வாயிலாக கொண்டு செல்லவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5) இக்கடிதம் பெற்றமைக்கான ஒப்புதலை அனுப்பி வைப்பதுடன், நடவடிக்கையின் விவரத்தினை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஓம்/– கே.கோபால்**
ஆணையர்

நகல்–பேரூராட்சிகள் ஆணையரக அலுவலர்கள்
நகல்–அனைத்து பிரிவு கண்காணிப்பாளர்கள்
நகல்–இ2